★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 சித்திரை 30 றஜப் 29 இதழ் 91

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13—5—83


# ஏபிரகாம் உட்பட ஆறு கூட்டணிவேட்பாளர் வாபஸ்!

## தமது நிலையை விளக்கி டாக்டர் ஏபிரகாம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நான்காவது வேட்பாளர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் தேர்தலிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

மற்றும் திரு. சி. தியாகராசா [தற்போதைய உறுப்பினர்] அபூபக்கர் வீதியைச் சேர்ந்த திரு த. முத்துக்குமாரு ஜெகதீசன். கோவில் வீதியைச் சேர்ந்த திரு. கந்தையா கனகலிங்கம், பாரதி வீதியைச் சேர்ந்த திரு. ச. கருணைநாதன் ஆகிய கூட்டணி வேட்பாளர்களும் யாழ். மாநகர சபைத் தேர்தலிலிருந்து தாம் விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளனர்.

தாம் தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாக வெளியிட்டுள்ள அறிக்கையில் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் தெரிவித்துள்ளதாவது:

### டாக்டர் அறிக்கை

"பல இளைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க நான் இப்போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறேன்.

"தமிழரசுக் கட்சிக்குப் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமென்ற காரணத்தால் காங்கிரஸ் கட்சியில் அங்கம் வகித்து வேட்பாளராக வந்த நான், அண்மைக் காலத்தில் நடந்த பல அரசியல் சம்பவங்களை ஆராய்ந்து தமிழர்களின் இன்னல்களைத் துடைக்க ஒருங்கிணைந்து ஒரே

(8 ம் பக்கம் பார்க்க)

★ உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ★

# சகல இடங்களிலும் போட்டியிட கூட்டணி முடிவு!

## சிவா - அமிர் கூட்டறிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழர் விடுதலைக் கூட்டணி, ஒரு தனி மனித கட்சியல்ல. பொறுப்பு வாய்ந்த கட்சி. தமிழீழம் முழுவதுமுள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டே கூட்டணி முடிவுசெய்ய முடியும். தனிப்பட்ட வேட்பாளர்கள் எடுக்கும் எந்த முடிவும், தேர்தலை எவ்வகையிலும் பாதிக்க மாட்டாது. நிலைமையை அவதானித்து, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்காளர்கள் புத்திசாலித்தனமாக வாக்களிக்கவேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம் சிவசிதம்பரமும், செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும் கூட்டாக நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய கூட்டமொன்று நேற்றுக் காலை நல்லூர் எம். பி திரு. எம். சிவசிதம்பரத்தின் (நல்லூர்) அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு. எம். சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ் எம். பி திரு வெ. யோகேஸ்வரன், மானிப்பாய் எம். பி. திரு. வி தர்மலிங்கம் உட்படப் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை கூட்டணி முதல் வேட்பாளர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் திரு. மு சிவசிதம்பரமும் திரு அ. அமிர்தலிங்கமும் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"அடுத்த 18-ந் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை ஒட்டி ஒரு குழப்பமான மனநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். சில வேட்பாளர்கள் தாம் விலகிக்கொள்வதாக அறிவிப்பதும் இன்று திரு கு ார் பொன்னம்பலம் தனது கட்சி நியமனப்பத்திரம் வழங்கிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருப்பதும் மக்களைத் திகைப்படையச் செய்திருக்கின்றன.

"சட்டப்படி இந்த விலகல்

(8ம் பக்கம் பார்க்க)

பேராதனைப் பல்கலைக் கழகம்:

# தமிழ் மாணவரை திரும்புமாறு கோரிக்கை

(பேராதனை)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட சிறு அசம்பாவிதத்தையடுத்து வெளியேறிய தமிழ் மாணவர்கள் அனைவரையும் மீண்டும் விடுதிகளுக்குத் திரும்பும்படியும், அவர்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர் ஒருவர் தடை செய்யப்பட்ட இயக்கமொன்றின் பிரசுரங்களை வைத்திருந்ததாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டதையடுத்து அங்குள்ள தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதையடுத்து முதலாம் வருட தமிழ் மாணவர்கள் விடுதிகளை விட்டு வெளியேறியதாகவும் கூறப்படுகின்றது. 2-ம் வருட தமிழ் மாணவர்களில் ஒரு சிலர் மாத்திரமே விடுதிகளில் தங்கியிருந்ததாகத் தெரிகிறது.

## ★ பிந்திய செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அநேகமான தமிழ் மாணவ—மாணவிகள் நேற்றிரவு ரயில்மார்க்கமாக யாழ்ப்பாணம் திரும்பினர்.

யாழ். ரயில் நிலையத்தில் இம்மாணவர்களுடன் நேற்றிரவு நமது நிருபர் தொடர்பு கொண்டபோது பேராதனையில் நிலைமை மோசமாக இருப்ப

(8ம் பக்கம் பார்க்க)

## கமலம் கொலைவழக்கு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை டியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மீண்டும் 16-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [மா—அ]

## பருத்தித்துறை சுயேச்சைகுழு போட்டியிலிருந்து வாபஸ்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபையில் போட்டியிடும் திரு பெ. வீரவாகு தலைமையிலான சுயேச்சைக்குழு போட்டியிலிருந்து வாபஸ்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக திரு. வீரவாகு விடுத்துள்ள அறிக்கை விபரம் நாளை வெளியாகும்.


## வெளிநாட்டு வேலை வாய்ப்புகள்

1. சிவில் என்ஜினியர்கள்
2. பிளான்ட் மனேஜர்
3. எலக்றிகல் என்ஜினியர்
4. குவான்டிட்டி சேவயர்
5. உதவி வியாபார முகாமையாளர்
6. பினான்ஸ் மனேஜர்
7. கேபின் ஜொயினர்ஸ்
8. பைப் பிற்றேஸ்
9. மெக்கானிக் பெற்றோல் — டீசல்
10. ஹெவி டியூட்டி ட்றைவர்
11. எலக்றிசன்
12. காப்பென்டர்
13. மேசன்
14. டைப்பிஸ்ட்

வயது 25க்கும் 40க்கும் இடையில் விண்ணப்பத்துடன் நேரடியாக வரவும்.

DUSITA 90, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.

(சாந்தி சினிமா அருகாமையில்)

லைசென்ஸ் இல: 354 — அனுமதி இல: J/FE 83

(7227)


## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தலைமைக்காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 931வது தேசிய லொத்தர் சபை முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

01 K 0522

ரூபா 1,49,000-00

இரண்டாம் பரிசு

10 N 0074

ரூபா 55,875-00

மூன்றும் பரிசு

14 S 0865

ரூபா 18,625-00

தலா ரூபா 670-50 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசு முடிவுகள் நாளை வரும்.

சாவகச்சேரி கூட்டணி நிலைமை

## 16ம் திகதி பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்படுமாம்

(யாழ்ப்பாணம்)

"நான் சார்ந்திருக்கும் இனத்தின் விடுதலைக்குக் கடந்த 30 ஆண்டுகாலமாக எனது பங்கைச் செலுத்திவருகின்றேன். நான் வதியும் பிரதேசத்தின் மக்களுக்கு நீதியான, நேர்மையான, ஊழலற்ற சேவையை என்னால் ஆற்ற முடியுமென்ற நம்பிக்கையில் நான் சார்ந்திருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்சபையின் தீர்ப்பை ஏற்று எனது இயக்கம் எனக்கு இப்பொறுப்பைச் சுமத்தியது'

இவ்வாறு இம்மாதம் 18-ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பாக சாவகச்சேரி நகராட்சிமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் போட்டியிடும் முதலாவது வேட்பாளரான திரு இ. க. மயில்வாகனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இதுதொடர்பாக விடுதலையில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட சிலர் இத்தேர்தலிலிருந்து நாம் வாபஸ் பெற வேண்டுமெனக்கேட்கிறார்கள்.

இந்நேரத்தில் இயக்கத்திற்குக் கட்டுப்பட்டவர் என்ற முறையில் எந்த முடிவையும் தனித்தெடுக்க முடியாத நிலையிலுள்ளோம். இதுதொடர்பாக நான் சார்ந்திருக்கும் இயக்கத்தின் தலைமையின்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு தபால் கந்தோருக்கு அருகாமையில் (3 மூன்று பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு மு. நவரத்தினராசா பொற்பதி ரோட், கோண்டாவில் கிழக்கு தொலைபேசி; 28150 (7210)

எழுதுமட்டுவாளில் 25 ஏக்கர் தென்னந்தோட்டம், வீடு, நன்னீர்கிணறு, மாமரம், கல்கொட்டை மரம் என்பவற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு 126 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 7203

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 8 பரப்புக்காணி தென்னந் தோட்டத்துடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு; திருமதி எஸ். எஸ் பொன்னுத்துரை கோண்டாவில்கிழக்கு தொலைபேசி; 23150 7211

பலாலி ரோட் 2ம் ஒழுங்கையில் 2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு; K. கந்தசாமி 44/2 கொலிச் ரோட், நீராவியடி யாழ்ப்பாணம். 7199

சொந்தப்பாவிப்பில் உள்ள சோமசெற் கார் உடன் விற்பனைக்குண்டு RG 32, பிறவுன் வீதி. யாழ்ப்பாணம். 7197

## தேவை

பிடவை வியாபாரத்தில் அனுபவம் மிக்க ஆண் விற்பனையாளர்கள் தேவை. விபரங்கட்கு நேரில் வரவும், சிமாட்டி ரெக்ஸ்சைல் இல; 122 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7190

யாழ். கே. கே. எஸ். வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய கடையில் றெக்கோடிங் பார் போடக்கூடியவர்கள் தேவை. தொடர்பு; மக்ரி சேல்ஸ் த டன்லப் ஸ்ரோஸ், 234 446), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7202

Engineering வகுப்புகளுக்கு Lecturers (எலக்ட்ரோனிக்ஸ் துறைகளுக்கும்) தேவை. 19-05-1983 முன் விண்ணப்பிக்கவும். JAST 22, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7208

## பயிற்சி

யாழ் நகரிலுள்ள ஒரு பிரபல நிறுவனத்தில் "Business Management" பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிக் காலம் மூன்று மாதம். பயிற்சிக்கட்டணம் ரூபா 500/- மட்டும் விபரங்களுக்கு 18-5-83 முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 7216 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7216

ரெவிவிசன் றிப்பியறிங், ஏயர் கொண்டிசனிங் Pipe Fitting வயறிங், Hotel Management பயிற்சி ஆரம்பம் 20-05-83 விபரங்களுக்கு The School of Computer Studies 52/1 கனகரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7222

## கல்வி

பொறியியல் கல்வி நிலையம் Engineering Education Centre) மோட்டார் மெக்கானிசம் வகுப்புகள் யாழ் நகரில் பஸ் நிலையத்திற்கு சமீபமாக நடத்துகிறது. உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாண்மையில் விரிவுரையாளர் S. C. இம்மானுவேல் B.sc (Cey) Engineer Specialist in Electrical Machines. 7194

## ஏலவிற்பனை

எதிர்வரும் சனிக்கிழமை 14-5-83 காலை 9 மணியளவில் எமது தலைமைக்காரியாலயத்தில் பழுதடைந்தும் (சிறிது) வெட்டுத்துண்டுகளும் ஏலவிற்பனைக்கு விடப்படும்.

பொதுமுகாமையாளர்
யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 7200

## கிராமோதயசபை தலைவராக தெரிவு

(கிளிநொச்சி)
வன்னேரிக்குளம் கிராமோதயசபையின் தலைவராக திரு. எம் ஜி சிவபாதம் ஏகமனதாகத் தெரிவானார்.

இவர் உதயதாரகை சனசமூக நிலைய தலைவரும், பாலையாளர் பாதுகாப்பு சங்க செயலாளரும், யுனெஸ்கோகிளப் உறுப்பினருமாவார்.

## புதுவருட உத்தியோகத்தர்கள்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். தேசிய கூட்டுறவுச்சபைத்தலைவர் திரு எஸ் சிவமகாராஜா தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் செய்யப்பட்டனர் தலைவி திருமதி சகிதேவி சுந்தரையா. உபதலைவர் திருமதி புஸ்பா சபாநாயகம், செயலாளர்; திருமதி பத்மா சிவகுருநாதன் உபசெயலாளர்; செல்வி சீதா வேலுப்பிள்ளை. பொருளாளர்; திருமதி நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம் செயற்குழு உறுப்பினர்களாக 16 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# ACCOUNTANCY

EPSILON'S
**Intensive Courses**
For
**I. C. M. A.** Foundation Stage Sections A & B
**Chartered Prelim** (English)
NOVEMBER 1983 EXAMS
Conducted during weekends by Qualified & Experienced
CHARTERED ACCOUNTANTS AND COST & MANAGEMENT ACCOUNTANTS
Please Contact:

**EPSILON LIMITED**
656, POINT PEDRO, NALLUR
JAFFNA.
(Opposite Kanthasamy Temple & close to Chethy Street Junction)
EPSILON (Limited Accomodation) (7159)

## இரண்டாண்டு நினைவு அஞ்சலி

கணபதிப்பிள்ளை காசிப்பிள்ளை (ஆசிரியர்)



தோற்றம்: 15-4-1925 மறைவு: 4-5-1981

அருள் நிறை உலகில் அவதரித்து
இறையருள் நாடி நீர் சென்ற
சாரண்டு நினைவு இன்று
என்றுமே மாறு உன் நினைவு
தெய்வம் ... தவப்புதல்வா
உந்தன் நினைவை யாம்
தினமும் எண்ணிப் புலம்பும்
மனைவி மக்கள் அஞ்சலி
கண்ணீர் மழைபோல் மல்கி
பாத மலராய் அஞ்செய்வோம்
தங்கள் பிரிவை எண்ணி மனம் கலங்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள்

வேலணை மேற்கு,
வேலணை-6 (7196)

உ

## திருமணம்

குறிரோதிகாரி வருடம் வைகாசி மாதம் 1ந் திகதி (15-5-83) ஞாயிற்றுக்கிழமை பகல் 12-30 மணி தொடக்கம் 2-08 மணி வரையும் உள்ள சுபமுகூர்த்தத்தில் குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில்

திருவளர் செல்வன் **யோகதாசனுக்கும்** திருவளர் செல்வி **நாகேஸ்வரிக்கும்**

திருமணம் நிகழும். அன்பர்களை அழைக்கின்றோம்.

இங்ஙனம்

வ. நடராஜாவும் பாரியாரும். மணமகனின் பெற்றோர்.

பொ. இராசதுரையும் பாரியாரும். மணமகளின் பெற்றோர்.

7184

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள, எங்கள் சொந்தப் பாவனையிலிருக்கும் கீழ் குறிப்பிட்டுள்ள மோட்டார் வாகனங்கள் விற்பனைக்கு உள்ளன.

(1) வொக்ஸ்வகன் வான் 33 ஸ்ரீ 7203 – 20 அந்தர்
(2) மொறிஸ் வான் 33 ஸ்ரீ 2888 – 15 ,,

தேவைப்படுவோர் வாகனங்களை எமது மணிக் கூட்டுக் கோபுர வீதியிலுள்ள எமது மோட்டார் பகுதியில் பார்வையிட்டு, கேள்வித் தொகையை எமக்குச் சீல் இட்ட பதிவுத் தபாலில் 31-05-83க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**யாழ்ப்பாண ஐக்கியவியாபாரச்சங்கம்,**
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

7220

## நன்றி நவிலல்

### திருமதி நாகலிங்கம் இராசம்மா

6 — 5 — 83 இல் காலஞ்சென்ற திருமதி நாகலிங்கம் இராசம்மா அவர்களின் மரண கிரியைகளின் போது நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் சாத்தியும் மற்றும் பல வழிகளிலும் உதவியும் எமது துன்பத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

N. அபயானந்தன், N சற்குணானந்தன், N சரவண பவானந்தன், V K, சபாரத்தினம் உட்பட சகல குடும்ப அங்கத்தினரும்.

7224

யாழ்/ கனகரத்தினம் ம ம. வித்தியாலயம் [ஸ்ரான்லி]
மாணவன் செல்வன் தி. நந்தகுமாரன் அவர்களின்

## 31ம் நாள் நினைவாஞ்சலி



மலர்வு: 6-3-1964 உதிர்வு 15-4-1983

நந்தகுமாரனே! நறகுணசீலா!! உந்தன் பிரிவால் உளம் வாடுகின்றோம். எம்மை விட்டகன்று இன்றுடன் மாதம் ஒன்று கழிந்ததுவே ஏங்குகின்றோமே கண்ணியமாக வாழ்ந்திட நீயும் கற்பனை கொண்ட வேளையிலே காலன் உனைக் கவர்ந்து விட்டானே! கலங்குகின்றோமே! வாடுகின்றோமே!! எத்தனை இடர்கள் எமக்கு வந்தாலும் எத்தனை இதயத்தில் என்றும் நீ இருப்பாய். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மௌனமாகப் பிரார்த்திக்கிறோம் அன்னாரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இங்ஙனம்
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
7223 ஸ்ரான்லிக்கல்லூரி.

### இடதுசாரி தீவிரவாதிகளை அடக்க

# சீனியை 'ஆயுத'மாகப் பயன்படுத்த அமெரிக்க அதிபர் யோசனை!

நியூயோர்க், மே, 12

மத்திய அமெரிக்க நாடான நிக்கரகுவாவில் உள்ள இடதுசாரி தீவிரவாதிகளுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் அந்நாட்டிலிருந்தும் சீனி இறக்குமதி செய்வதைத் தடைசெய்ய அமெரிக்க ஜனாதிபதி றெனல்ட் றீகன் யோசனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையிலேயே அவர் இந்த யோசனையைத் தெரிவித்தார். நிக்கரகுவா அமெரிக்காவுக்கு சீனி ஏற்றுமதியை மேற்கொள்வதன்மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கிறது. எனவே நிக்கரகுவாவிலிருந்து சீனி இறக்குமதி செய்வதைத் தடைசெய்யும் பட்சத்தில் அந்நாட்டுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தி அங்குள்ள இடதுசாரிகளின் தீவிரத்தை அடக்கவேண்டுமென்பதே றீகனின் முக்கிய நோக்கமாகும்.

நிக்கரகுவாவிலுள்ள இடதுசாரிகள் தமது அந்நியச் செலாவணியில் பெரும்பகுதியை இராணுவத் தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதில் செலவிடுவதையும் திரு றீகன் சுட்டிக்காட்டினார்.

மத்திய அமெரிக்க நாடுகளான ஹொண்டுயுரஸ், நிக்கரகுவா, எல்சல்வடோர் ஆகியனவற்றிடமிருந்து அமெரிக்கா 1 கோடியே 40 லட்சம் டாலர்கள் பெறுமதியான சீனியை இறக்குமதிசெய்துவருகின்றது.

ஜனாதிபதி றீகனின் மேற்குறிப்பிட்ட யோசனைக்குப் பதிலளிக்கும்வகையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தொன்றில், முன்பு சோவியத் யூனியனுக்கு தானிய ஏற்றுமதி செய்வதைக் கார்ட்டர் நிர்வாகம் தடைசெய்தபோது சோவியத்தின் பொருளாதாரத்தைவிட அமெரிக்கப் பொருளாதாரமே பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

# அணு ஆயுத அச்சுறுத்தலில் மனிதகுலம்!

### சோவியத் ஜனாதிபதி எச்சரிக்கை

மாஸ்கோ, மே 12

"மனிதகுலம் முழுவதும் அணுவாயுத அழிவு என்ற பயங்கரத்தின் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள வேளையில், எல்லாவற்றுக்கும் முன்னதாக சமாதானத்தைப் பாதுகாப்பது குறித்து அரசியல் முடிவுகளை எடுப்பதற்காக உழைக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். எனவே அரசியல் ரீதியில் நிதானமாகவும், பொறுப்புடனும், பொது அறிவுடனும் அமெரிக்க வீரர்கள் செயல்படவேண்டிய காலம் இது" என்று ஜெர்மன் ஜனநாயக குடியரசின் தலைவர் எரிக் ஹொனேக்கருக்கு இங்கு அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தின்போது உரையாற்றிய சோவியத் ஜனாதிபதி யூரி அந்திரபோவ் கூறினார்.

"ஒரு அணுயுத்தம் மூழ்வதைத் தவிர்ப்பதற்காக அணுவாயுத ஏவுகணைப் போட்டியின் புதிய சுற்றைத் தடுப்பது இன்று பிரதான கடமையாக உள்ளது. சோஷலிச நாடுகள் இப்பிரச்சினை குறித்து மிகப் பொறுப்புடன் செயல்படுகின்றன. நமது ஆலோசனைகள் பிராக் அறிக்கை உட்பட பல கூட்டு அறிக்கைகளில் முன் வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலோசனைகள், யுத்தம் ஒன்றை ஏற்படுத்தக் கூடிய சாதனங்களை அகற்றுவதையும், யுத்தம் ஒன்றைத் தடுக்கக்கூடிய அரசியல் தடைகளை உருவாக்குவதையும் வலியுறுத்துகின்றன. ஐரோப்பிய மக்களதும், அனைத்து உலக மக்களதும் பாதுகாப்பின் சட்டபூர்வமான நலன்களை இந்த ஆலோசனைகள் கணக்கில் எடுத்துள்ளன. ஆனால் இந்தப் புதிய சமாதான முனைப்புகளுக்குப் பதில் கொடுக்க நேட்டோ நாடுகள் இன்றுவரை முன்வரவில்லை" என்றும் சோவியத் ஜனாதிபதி கூறினார்.

"அமெரிக்கா தனது பேர்ஷிங் ஏவுகணைகளையும், பேர்ஸி ஏவுகணைகளையும் மேற்கு ஐரோப்பிய மண்ணில் வைக்க முனைந்துள்ளது. இது இப்படியே போகுமாயின், இதன் எதிர்விளைவுகளும் தவிர்க்க முடியாதவை. சோவியத் யூனியனும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் இதர வார்சோ ஒப்பந்த நாடுகளும் அமெரிக்காவின் இந்த முயற்சிகளுக்கு பதிலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டேதீரும்" என்றும் ஜனாதிபதி யூரி அந்திரபோவ் தெரிவித்தார்.

### தமிழக மறியல் போராட்டம்:

# சென்னையில் கைதானவர்கள் அனைவரும் விடுதலை!

சென்னை, மே, 12

சென்னையில் மறியல் போராட்டம் நடத்தியதாக நேற்றுக் கைதுசெய்யப்பட்ட ஒன்பது அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் நேற்று மாலையில் விடுதலைசெய்யப்பட்டனர்.

தமிழக அரசுமீது வரட்சி நிவாரணம், உணவுப் பங்கீடு, மின் தடை ஆகியன சம்பந்தமாக மத்திய அரசு பாரபட்சம் காட்டிவருவதாகத் தெரிவித்தே இம்மறியல் போராட்டம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கி)

# பாக். பத்திரிகையாளர் மீது இந்தியா கண்டனம்!

கராச்சி, மே, 12

பாகிஸ்தான் பத்திரிகையாளர்கள் இந்தியாவில் அஸாம் கலவரங்கள் குறித்து வகுப்புவாத ரீதியில் பிரசாரம் செய்து வருகின்றனர் என்று இந்தியா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

கராச்சியில் உள்ள இந்திய தூதரக உயர் அதிகாரி திரு ஜி. பார்த்தசாரதி இவ்ஆட்சேபனையைப் பாகிஸ்தான் பத்திரிகையாளர்கள் சங்கத் தலைவரான திரு. இன்குலாம் மாதிரியிடம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மகாநாடு கடந்த மூன்று தினங்களாகக் கராச்சியில் நடைபெற்றது. இம்மகாநாட்டை பாக் அதிபர் ஜெனரல் ஸியாவுல்ஹக் ஆரம்பித்து வைத்தார்.

இம்மகாநாட்டின் இறுதியிலேயே பாக். பத்திரிகையாளர்கள் அஸாம் நிலவரங்களை வகுப்புவாத ரீதியில் நோக்கி அறிக்கை தயாரித்துள்ளனர் என்று இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்திய தூதரக அதிகாரி திரு ஜி பார்த்தசாரதி தமது கண்டனத்தில் மேலும் தெரிவிக்கையில், பாகிஸ்தான் பத்திரிகைகளின் இத்தகைய நடவடிக்கை இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக இருக்கின்றது அத்துடன் இந்தியா, பாகிஸ்தானுக்கிடையிலான சிம்லா ஒப்பந்தத்தையும் மீறுவதாக இருக்கிறதென்று குறிப்பிட்டுள்ளார். (கி)

# விண்வெளியில் புதிய வால் நட்சத்திரம்!

கலிபோர்னியா, மே, 12

புதிய வால் நட்சத்திரம் ஒன்று பூமிக்கு அண்மையாக 50லட்சம் கிலோமீட்டர் தூரத்தில் செல்வதை வானவெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

இந்த வால்நட்சத்திரம் மங்கலாகவே தெரிந்துள்ளது. இதன் நீளம் 64,375 கிலோமீட்டர்களாகும். சுற்றளவு 1·6 கிலோமீட்டராகும்.

கலிபோர்னியாவின் மேற்குக் கரைப்பகுதியிலேயே இந்த நட்சத்திரம் நகர்வது அவதானிக்கப்பட்டது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் காணப்பட்ட புதிய வால் நட்சத்திரம் இதுவென்று தெரிவிக்கப்பட்டது.

போட்டோறிக்கோவிலுள்ள வானியல் அவதானிகள் இந்த நட்சத்திரத்தின் தோற்றம் அரிதானதொன்று என்று குறிப்பிட்டனர். (கி)

# "அணுயுத்தம் மூண்டால் நேட்டோவுக்கு ஆதரவாக பிரான்ஸ் செயல்படும்"

### - நேட்டோ தளபதி

பாரிஸ், மே 13

நடுத்தர வீச்சு ஏவுகணைகள் குறித்த ஜெனிவா பேச்சுகளில் சோவியத் யூனியனின் சரியான நிலையை, ஐரோப்பாவிற்கான நேட்டோவின் உயர் தளபதி டபிள்யு. ரோஜர்ஸ் ஒத்துக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ஆயுதங்களின் சமமான குறைப்பை சோவியத் யூனியனும் அமெரிக்காவும் மட்டுமல்ல அமெரிக்காவின் நேட்டோ கூட்டாளிகளான பிரான்ஸும், பிரிட்டனும் கூடச்செய்து கொள்ளவேண்டும் என்பது சோவியத் யூனியனின் உறுதியான நிலைப்பாடு ஆகும்.

பிரிட்டனில் நடைபெற்ற ஆங்கிலோ-அமெரிக்கப் பத்திரிகையாளர் சங்கத்தில் ஜெனரல் ரோஜர்ஸ் உரையாற்றுகையில் பொதுவானதும் சரியானதுமான கருத்தோட்டங்கள் குறித்துக் கூறினார்.

நேட்டோவின் எதிர்த் தாக்குதல் தயார் நிலையைச் சுட்டிக்காட்டிய அவர் பிரான்சின் அணுசக்தி ஆற்றலை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

"வார்ஸா ஒப்பந்த நாடுகளுடன் யுத்தம் ஏற்படும் பட்சத்தில், பிரான்ஸ் தனது இராணுவ சுதந்திரத்தையும் மீறி எமது தரப்பில் நின்று போரிடும்" என்றும் ரோஜர்ஸ் கூறினார்.

"கம்யூனிஸ்ட் முகாமுடன் யுத்தம் ஏற்படும் பட்சத்தில் தமது யுத்த சக்திகளை நேட்டோ ராணுவத்துடன் ஐக்கியப்படுத்தும் திட்டம் குறித்து பிரெஞ்சு போர்யாவ நிபுணர்கள் என்னுடன் ஆலோசிக்கவில்லை. ஆனால் இதற்குத் தயாராக அவர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. மேற்குஐரோப்பாவைப் பாதுகாப்பதற்கு எமது நேச அணிகளின் துருப்புகளுடன் பிரெஞ்சுத் துருப்புக்களை இணைப்பது குறித்து ஒரு உடன்பாட்டைச் செய்துகொள்வதுதான் எமது நோக்கம்" என்றும் ரோஜர்ஸ் கூறினார்.

# சோவியத் அதிபரின் அமெரிக்க பேனா நண்பி!

நியுயோர்க் மே 12

சமந்தா ஸ்மித் என்ற பத்து வயதுச்சிறுமியை சோவியத்யூனியனுக்கு பத்து நாட்கள் சுற்றுப்பயணம் வரும்படி சோவியத் அதிபர் திரு யூரிஅந்திரபோவ் அழைத்துள்ளார்.

இச்சிறுமி திரு. அந்திரபோவ் சோவியத் தலைவரான பின்னர் கடிதமூலமாக அவருடன் தொடர்பு கொண்டார் தனது கடிதமொன்றில் அமெரிக்காவுக்கும் சோவியத்துக்குமிடையே யுத்தம் மூளுமா? என்றும் அச்சிறுமி வினவியிருந்தார்.

இதற்கு பதிலளித்து திரு. அந்திரபோவ் எழுதிய கடிதத்தில் சோவியத்யூனியன்போரைவிரும்பும் நாடல்ல இங்கு அனைவரும் சமாதானத்தையே விரும்புகிறார்கள் இதனை நீங்கள் நேரில் வந்து பார்க்கலாம் என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன் அச்சிறுமியை அவரது பெற்றோருடன் சோவியத்யூனியன் வரும்படி அழைத்து அதற்கான செலவுகளை தாமேபொறுப்பேற்பதாகவும் திரு. அந்திரபோவ் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

சமந்தஸ்மித்திடம் இதுபற்றிகேட்டபோது தாம் லெனின் சமாதியையும், சோவியத்சர்க்கஸ்ஸையும்பார்க்கஆவல் கொண்டுள்ளதாக தெரிவித்தார். (கி)

# இந்தியாவில் சோவியத் பிரதிப் பிரதமர்

புதுடில்லி, மே, 12

சோவியத் யூனியனின் முதலாவது பிரதிப் பிரதம மந்திரி திரு ஆக்கிப்போவ் நேற்று மாலை இந்தியா வந்துசேர்ந்தார்.

கடந்த ஆண்டு பிரதமர் இந்திரா காந்தி சோவியத் யூனியனில் செய்துகொண்ட உடன்பாடுகள் குறித்து மேலும் ஆலோசனை செய்ய இவ்விஜயத்தைத் தாம் மேற்கொள்வதாக அவர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சர் திரு நரசிம்மராவுடனும் சோவியத் பிரதிப் பிரதமர் பேச்சுக்களை நடத்தினார். [கி]

# வானொலியில் இன்று

(கொழும்பு)

இன்று இரவு 9-30 மணி முதல் 10-30 மணிவரை இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் காலஞ் சென்ற தவில்மேதை யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தியின் 8வது சிரார்த்த தினத்தை முன்னிட்டு விசேஷ நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பாகும். இந்நிகழ்ச்சியில் அவர் பிரபல நாதஸ்வர வித்துவான்களுடன் இணைந்து வாசித்த சில பகுதிகள் இடம் பெறும்.

# 'ரோஹிணி' படப்பிடிப்பு ஆரம்பம்

சென்னை, மே. 12

நேற்று ஸ்ரீஹரி கோட்டா மீது இந்திய விண்வெளிக்கலமான 'ரோஹிணி' சென்றபோது அதிலுள்ள படப்பிடிப்புக்கருவி இயக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தெளிவான பத்து படங்களை அக்கருவி ஸ்ரீஹரி கோட்டாவுக்கு அனுப்பிவைத்தது. அப்படங்கள் தரை அமைப்புப் பற்றியனவாக இருந்தன.

### மணிவாக்கு

''பிரம்மனின் கைகளிலிருந்து விடுபடும்போது எல்லாமே நன்றாகத்தான் இருக்கின்றன. மனிதனின் கைகளில் அகப்பட்டதும்தான் எல்லாமே சீர்கெட்டுப் போகின்றன''.

-ஜீன் ஜெக்குரூஸோ

# நமது நோக்கு

## ஆஸியாவின் எதிர்காலம்

ஆஸியாவில் அமைதி நிலவுவதானால் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கிடையில் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் மாத்திரமின்றி பரஸ்பரம் ஒன்றன் மீது மற்றொன்று சந்தேகம் கொள்ளும் நிலைமை உருவாகாமலும் இருக்கவேண்டும்.

இப்பிரதேசத்திலுள்ள பெரிய நாடுகள் தங்கள் அண்டை நாடுகளுடன் அவ்வப்போது பிணக்குகளை உருவாக்கிக்கொண்டு அடிக்கடியில் இறங்குவதும், அதனால் ஏற்படும் பகைமையின் காரணமாக ஆயுதக்குவிப்பும், நவீன போர்க்கருவிகளைப் போட்டி போட்டுக்கொண்டு வாங்குவதும்-உற்பத்தி செய்வதும் சகஜமாகி வருகின்றது.

பகைமையைப் பாராட்டும் அண்டை நாட்டுடனான தனது ராணுவபலம் எந்த வகையிலும் குறைந்துவிடக் கூடாதென்ற நோக்கில் சில நாடுகள் அணுகுண்டுகளைத் தயாரிப்பதில் கூட இறங்கிவிட்டதை அறிகின்றோம்.

இப்பகுதியில் மக்கள் சீனக்குடியரசு பல அணுகுண்டு பரிசோதனைகளை நடத்தி முடித்துவிட்டதின் காரணமாக ஏராளமான அணுகுண்டுகள் அதன் வசம் இருக்கலாமென்று நம்பலாம். அதேபோல இந்தியா 1974ம் ஆண்டில் அணுகுண்டு ஒன்றை பரிசோதித்தது. இரண்டாவது குண்டு ஒன்றையும் அது பரிசோதித்துள்ளது. எனவே பக்கத்து நாடுகளின் பகைமை நீடிக்குமானால் இந்தியாவும் அணுகுண்டுகளை உற்பத்தி செய்து வைத்துக்கொள்வது சாத்தியமே.

அணுசக்தியை அமைதி நோக்கங்களுக்கு மாத்திரமே இந்தியா பயன்படுத்தும் என்று அந்நாட்டுத் தலைவர்கள் கிளிப்பிள்ளை போல திரும்பத்திரும்பக் கூறிவந்தபோதிலும் பாகிஸ்தானுக்கு இதில் நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

பாகிஸ்தான் எந்த அளவுக்கு ராணுவ-அணுசக்தியில் வலுவாகவுள்ளதோ அந்த அளவுக்கு இந்தியா தனது சக்தியை அதிகரித்துக்கொள்ள முனைகிறது. பெரும்பாலும் சோவியத் யூனியனையே ஆயுதக்கொள்வனவுக்காக நம்பியிருந்த இந்தியா இப்பொழுது பிரான்ஸ், பிரிட்டன் முதலிய நாடுகளிலிருந்தும் நவீன ஆயுதங்களை அதிகமாகக் கொள்வனவு செய்கிறது. இந்த வகையில் இந்த ஆண்டில் மாத்திரம் நவீனஆயுதங்களை வாங்குவதற்காக 967 கோடிரூபாவை செலவிடவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராமசாமி வெங்கட்ராமன் அறிவித்திருக்கிறார்.

இந்தியாவின் இராணுவ பலம் அதிகரிப்பதை பாகிஸ்தான் பார்த்துக் கொண்டிருக்காது. ஏற்கனவே இந்தியாவைப் போல அணுகுண்டு பரிசோதனைகளை நடத்த பாகிஸ்தான் ஆயத்தம் செய்வதாக செய்திகள் வெளிவந்துள்ளன. பாகிஸ்தான் அணு குண்டுகளைத் தயார் செய்யுமானால் நிச்சயமாக இந்தியா அதற்கு சவாலாக அணு ஏவுகணைகளை உற்பத்தி செய்வது நிச்சயமாகிவிடும்.

இந்தச் சாத்தியக்கூறுகள் பற்றி ஏற்கனவே மேற்கத்திய சஞ்சிகைகள் ஹேஷ்யம் கூறத் தொடங்கியுள்ளன. ''பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கும் திறனை வளர்த்துக் கொள்கிறது என்று கூறப்படுவதையொட்டி பிராந்திய அளவில் சென்று தாக்கக் கூடிய அணு ஏவுகணைகளை இந்தியா தயாரித்து பயன்படுத்துவதற்கு முடிவு செய்யலாம், என்று அமெரிக்க சஞ்சிகை யொன்று எழுதியுள்ளது. இவ்வாறு இப்பிரதேச நாடுகளுக்கிடையில் பகைமை உணர்வு வளர்வதனால் மேலாதிக்க வல்லரசுகள் இந்துமாக் கடல் பிரதேசத்தை தங்களின் நடவடிக்கைகளுக்கு உகந்த இடமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாகப் போய் விடுகின்றது.

இதனால் ''இந்துமாக் கடல் பகுதியை அமைதிப் பிரதேசமாக்கும்'' இலட்சியமும் தவிடுபொடியாகி வருகின்றது.

இப்பிரதேசம் மேலாதிக்க நாடுகளின் வேட்டைக் காடாகவும், பலப் பரீட்சைக்கான களமாகவும் மாறி வருவதானது ஆசியாவிலுள்ள சகல நாடுகளுக்குமே ஒரு அச்சுறுத்தல் என்று கொள்ளவேண்டும்.

இந்த நிலைமையில் ஆயுதங்களை வாங்கி குவிப்பதிலும், இராணுவ எண்ணிக்கையை அதிகரிப்பதிலுமே அக்கறை செலுத்தாமல் நாடுகளுக்கிடையிலான பிணக்குகளை விரைந்து தீர்த்துக்கொள்ளவும் - ஒன்றையொன்று நம்பிக்கையுடனும் நட்புறவுடனும் எதிர்கொள்ளவும் கூடியதான வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதில் அதிகமாக அக்கறை காட்டுவது அவசியம்.

ஆசியாவின் எதிர்காலம் இம்மாதிரியான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.

# மக்கள் பண்பாட்டில்தான் நாட்டின் எழில்தங்கியுள்ளது!

## சென்னை மேல்நீதிமன்ற நீதியரசர் கருத்து

(கொழும்பு)

''தமிழகத்தைவிட ஈழநாட்டவர்கள் தமிழ் மொழிக்கு நூறு மடங்கு சேவையாற்றியுள்ளனர். ஈழநாட்டு மக்களின் தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ் மொழி பெயர்ப்புக்கள் பாராட்டிற்குரியன''.

இவ்வாறு சென்னை மேல் நீதிமன்ற நீதியரசர் திரு எஸ். மோகன் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்

கலை, இலக்கிய நண்பர்கள் ஒழுங்குசெய்திருந்த இக்கூட்டத்திற்கு முன்னாள் நீதியரசர் திரு லக்ஷ்மண ஐயர் தலைமை தாங்கினார்.

'தமிழும் எழிலும்' என்ற தலைப்பில் உரையாற்றிய நீதியரசர் மோகன் மேலும் கூறியதாவது:-

''தமிழ் மொழியின் எழிலைச் சுருங்கச் சொல்லி விளக்கிவிட முடியாது. ஒரு நாட்டின் எழில் அந்த நாட்டின் கட்டிடங்களில், வீதிகளில், இயற்கை எழிலில் தங்கியிருக்கவில்லை. அந்தநாட்டு மக்களின் பண்பிலேயே தங்கியுள்ளது.

''தமிழ் மக்களின் பண்பு, அவர்கள் கடைப்பிடித்துவரும் கலாசார அடிப்படையில் நோக்கும்போது அவர்களின் உள்ளம் இந்த சமுத்திரத்தைவிட ஆழமாகவும் பரந்ததாகவும் எழில் நிறைந்ததாகவும் காணப்படுகிறது.

''பக்தி, வீரம், துயரம், நகைச்சுவை, காதல், கோபம் ஆகியவற்றினால் ஏற்படும் உணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடியவகையில் தமிழ் மொழி சிறப்புப் பெற்றிருப்பதும் அதன் பெருமைக்கு ஒரு காரணமாகும்.

''நாட்டியத்துக்கு இலக்கணம் வகுத்ததே தமிழ்மொழி தான். பரத நாட்டியம் என்ற சொல்லில் வரும் 'ப' பாவத்தையும், 'ர' ராகத்தையும், 'த' தாளத்தையும் குறிக்கின்றது. இந்த மூன்றும் ஒழுங்காக இணைந்து கொள்வதைத்தான் 'பரதம்' — பரத நாட்டியம் எனப் பெயரிட்டார்கள் எமது முன்னோர்.

''தாய்மார்களை ஒன்று கேட்கிறேன். தாலாட்டை மறந்து விடாதீர்கள். உங்கள் மழலைச் செல்வங்களுக்குத் தமிழில் தாலாட்டித் தமிழைப் புகட்டுங்கள்.

''உலகில் 70 கோடி மக்கள் ஆங்கிலத்தையும், 15 கோடி மக்கள் பிரெஞ்சு மொழியையும், 5 கோடி 67 லட்சம் மக்கள் தமிழ்மொழியையும் பேசுகிறார்கள் இவ்வளவு பெருந்தொகையான மக்கள் தமிழ் மொழியைப் பேசுகின்றபோதிலும் தமிழ் மொழியின் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது'' என்று கூறினார்.

கலை, இலக்கிய பத்திரிகை நண்பர்கள் சார்பில் திரு எஸ் திருச்செல்வம் நன்றி கூறினார்

# வடபகுதி விமான சேவைகளை

## மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

(காவிட்டபுரம்)

''பலாலி விமான நிலையத்திலிருந்து இடம்பெற்றுவந்த விமான சேவைகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டதால் வடபகுதி மக்கள் தமது அவசர பிரயாணங்களுக்கு பெரிதும் கஷ்டமடைகின்றனர் ஆகவே இவ்விமான நிலையத்திலிருந்து ஏற்கனவே நடைபெற்ற வடபகுதி விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குக'' என்று அரசாங்கத்தை கோரும் தீர்மானமொன்றை பழையவீமன் காமம் கிராமோதயசபை நிறைவேற்றியுள்ளது.

மேற்படி கிராமோதயசபையின் கூட்டமொன்று வீமன் காமம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற சமயமே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிராமோதய சபைத்தலைவர் திரு எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:

பலாலி விமான நிலையத்திலிருந்து முன்னர் கொழும்புக்கும், திருச்சிக்கும் செல்லக் கூடியதாக இருந்தது. ஆனால் திருச்சி விமான சேவை முதலில் நிறுத்தப்பட்டு கொழும்புக்குச் செல்லும்சேவை இடம் பெற்று வந்தது. தனியார் விமான சேவை மூலம் இடம் பெற்றுவந்த கொழும்புக்கான விமானசேவையும் கடந்த மாதம் 20ம் திகதியுடன் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் வடபகுதி மக்கள் தமது அவசர பிரயாணங்களை மேற்கொள்ள முடியாது கஷ்டமடைகின்றனர். ஆகவே வடபகுதி விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும், இதுகுறித்து காங்கேசன்துறை எம். பி யிடமும் கோருதல் வேண்டும்.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் உதவி சுகாதார வைத்திய அதிகாரியின் இடம் பல காலமாக காலியாக இருக்கிறது இதனால் சுகாதார வைத்திய அதிகாரிக்கு வேலைப்பளுவும் நல்ல திட்டங்களை செயற்படுத்த முடியாமலும் உள்ளது ஆகவே காலியிடத்தை நிரப்புமாறு சுகாதார பகுதியினரை கோருதல்.

காங்கேசன்துறை அபிவிருத்திச்சபை உப உலுவகை எல்லைக்குள் உள்ள வீடுகளுக்கு வீட்டு இலக்கங்கள் பொறிக்கப்படவேண்டும். அத்துடன் இங்குள்ள ஒழுங்கைகளுக்கும் பெயரிடவேண்டும்.

## அபிவிருத்தித் திட்டங்கள்

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை கிராமிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் வெளிநாட்டு உதவிகளைக்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவது வரவேற்க வேண்டிய நடவடிக்கை.

ஆனையிறவு ஏரியை நன்னீர் ஏரியாக்கும் திட்டம் ஒன்றும் 1985-ம் ஆண்டளவில் மேற்கொள்ளப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மகாவலி அபிவிருத்தி போன்ற பாரிய திட்டம் ஒன்றும் தமிழ்ப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படாததை மேற்கூறிய சிறிய அளவிலான திட்டங்கள் ஈடு செய்துவிட முடியாது.

என்றாலும் அபிவிருத்தி குன்றிய இப்பகுதிகள் விடயத்தில் இந்த அளவிலாகுதல் அக்கறை காட்டப்படுவதைக் கவனிக்க வேண்டும்.

இவைகளில் உள்ளூர் மூலவளங்களுக்கும் உள்ளூர் உழைப்பாளிகளுக்குமே முதலிடம் வழங்கப்படுவது அவசியம். தமிழ்ப் பிரதேசங்களில் கிடைக்கக் கூடிய வளங்களை உதாசீனம் செய்வதை யாரும் விரும்பமாட்டார்கள்.

## வைரவர் தோத்திரம்

உடுக்கையங் கரத்தாய் போற்றி
உலகெலா முணர்வாய் போற்றி
கொடுக்குடை தரிப்பாய் போற்றி
கோதிலா வமுதே போற்றி
நடுக்குரு நடுவே போற்றி
ஞமலிவா கனனே போற்றி
வடுக்களை யிறையே போற்றி
வைரவா போற்றி போற்றி

ஊனுற வொழிப்பாய் போற்றி
ஊட்டமு மாவாய் போற்றி
பானுவூ டொளிர்வாய் போற்றி
பராபர ஞானப் போற்றி
தேனுமாய்த் தெவிட்டாய் போற்றி
தேசுறு மெய்யாய் போற்றி
வானுலா மறையாய் போற்றி
வைரவா போற்றி போற்றி

அக்கினி மூர்த்தா போற்றி
அரிக்கரு ளீந்தாய் போற்றி
மிக்கபே ரருளே போற்றி
மீறுநர்க் கடிவாய் போற்றி
நக்கனாய் நிற்பாய் போற்றி
நானிலங் காப்பாய் போற்றி
வக்கிரந் தீர்ப்பாய் போற்றி
வைரவா போற்றி போற்றி

அஞ்சுயிர்க்க கரணே போற்றி
அறந்தரு மமுதே போற்றி
நெஞ்சுறு நிறைவே போற்றி
சநர்த்தங்கள் முடிப்பாய் போற்றி
சஞ்சலந் தீர்ப்பாய் போற்றி
தாவில்வந் தாள்வாய் போற்றி
மங்குறு நிறத்தாய் போற்றி
வைரவா போற்றி போற்றி

ச. தங்கமாமயிலோன்

# "தந்தை செல்வாவுக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை"

## பிரசார கூட்டத்தில் மானிப்பாய் எம். பி.

[மட்டுவில்]

தந்தை செல்வா காந்தியத்தில் நம்பிக்கையுள்ளவர். அகிம்சை வழியிலேயே சென்றவர். அவரால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அஹிம்சை வழியையே காட்டியுள்ளார். நாம் அந்த வழியிலேயே செல்கிறோம். தந்தை செல்வாவுக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை. அவர் வழியில் உருவாகிய எமது இயக்கத்திற்கும் அதில் நம்பிக்கை இல்லை. உண்மை, சத்தியம், அகிம்சை இவைகளுக்கே என்றும் வெற்றி கிடைக்கும்"

இவ்வாறு சாவகச்சேரி, கல்வயலில் நடைபெற்ற நகரசபைக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் மானிப்பாய் எம். பி. திரு வி தர்மலிங்கம் கூறினார்.

திரு. தர்மலிங்கம் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:

"தந்தை செல்வா அகிம்சை வழியிலேயே எமது இயக்கத்தை வழிநடத்திச் சென்றவர்; அதேவேளையில் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் அக்கறை காட்டிவந்தவர். உண்மை, நேர்மை, சாந்தம், அகிம்சை அத்தனையும் அவரின் மொத்த உருவம்; அவர் தமிழன் தன் சொந்த நாட்டில் சகல உரிமைகளையும் கொண்ட ஓர் சுதந்திரப் பிரஜையாக வாழவேண்டும்; அதேவேளையில் தமிழ்-சிங்கள சகோதரத்துவமும் நிலைக்க வேண்டும் என்று விரும்பினார். அதன் காரணமாகவே சமஷ்டி கட்சின்மூலம் இந்த நாட்டில் தமிழ்-சிங்கள சகோதரத்துவத்திற்கு வித்திட முயன்றார். பல விதமாகப் பாடுபட்டார். பல ஒப்பந்தங்கள் செய்தார், ஒன்றும் பலன்தரவில்லை. சற்றில் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. இதற்கு அப்பால் வேறுவழியில்லாததின் காரணமாகவே தமிழ் சுயநிர்ணயமான சுதந்திர தமிழீழத்தைக் கோரினார் அதற்காகவும் அவர் அகிம்சை வழியிலேயே செயற்பட்டார்'' என்றார்.

---

ஆயுள்வேதக் கல்லூரி

## ஆணையாளருக்கு விடுதலை இராணுவம் கடிதம்?

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆயுர்வேதக் கல்லூரியின் ஆணையாளர் திரு டபிள்யு. எஸ். செந்தில்நாதனுக்கு 'தமிழ் ஈழ விடுதலை இராணுவத்தின்' பெயரில் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஈழத்தில் எந்தவொரு இனவாத அரசின் காலவருடிகளுக்கும் இடமில்லை. மலரப்போகும் தமிழீழம் தூய்மையானதாக இருக்கவேண்டும். இதுவே எமது இலட்சியம் என்று குறிப்பிடப்பட்டுள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"தங்கள் நிர்வாகத்தில் ஊழல் நிறைந்திருப்பதாக எமக்கு கடிதங்கள் வந்துகுவிகின்றன இதுபற்றி பூரண விசாரணை நடாத்திவிட்டோம் தங்களுக்கான தீர்ப்பையும் தீர்மானித்துவிட்டோம். தீர்ப்பு வழங்குவதற்குமுன் இது இறுதியான எச்சரிக்கை எமது தீர்ப்பை தாங்கள் அறியாமல் இல்லை. தங்கள் சுயநலனுக்காக அப்பாவி தமிழ் மாணவர்களின் எதிர்கால வாழ்வை பாழாக்கவேண்டாம் இக்கடிதம் கிடைத்து 72 மணித்தியாலத்துக்குள் உங்கள் நிர்வாகத்தை வேறுவைத்திய சபையிடமோ கோர்ட்டிடமோ ஒப்படைத்துவிடவும்''

---

## "கிராமம் எழுச்சிபெற கல்வி அறிவு முக்கியம்"

[மன்னார்]

"கிராமங்கள் எழுச்சிபெற வேண்டுமானால் கல்வி அறிவு மிக அவசியம் தேவை இக்கல்வி அறிவு முழுமையாக வழங்கப்பட்டால் மக்கள் அறியாமையில் இருந்து விடுபட்டு அபிவிருத்திப் பாதையில் முன்னேறிச்செல்லமுடியும்''

இவ்வாறு மன்னார்-புளியடி இறக்கம் கிராமோதய சபைத் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட கற்கடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு. ஏ. அந்தோனிமுத்து தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "எமது பகுதியிலுள்ள பாடசாலைகளில் நீண்டகாலமாக ஆசிரியர் பற்றாக்குறை இருந்துவருவது மிகவும் கவலைக்குரியதாகும். அரசாங்கம் புதிய ஆசிரியர்களை நியமிக்கும்வரை காத்திருக்காது கிராம மக்களும், பாடசாலை நலன் விரும்பிகளும் பண உதவி வழங்கி வசதிகட்டண ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்'' என்றார்.

---

LANKA CEMENT LIMITED

இலங்கை சீமேந்து லிமிட்டெட்

காங்கேசன்துறை

பழுதுபட்ட வெற்று சீமேந்து பைகள்

விற்பதற்கான கேள்விப்பத்திரம்

20,000 மேற்பட்ட பழுதுபட்ட பைகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

இவற்றை விற்பதற்கான கேள்விப்பத்திரங்கள் 18-5-83 திகதி மாலை 3 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக

கணக்காளர், இலங்கை சீமேந்து லிமிட்டெட்

என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்,

இவ்வெற்றுப் பைகளை 14-5-83 திகதி சனிக்கிழமை மாலை 3 மணி வரை எமது களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் 1000 மேற்பட்ட பைகள் விற்பனைக்கு விடப்படும்.

கணக்காளர்,

இலங்கை சீமேந்து லிமிட்டெட்

காங்கேசன்துறை [7207]

---

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 30-ம் திகதி வெள்ளிக்கிழமை (13-5-83)

மேடம்: அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள் சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம். சிலரின் குறுக்கு வழித்தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும் அமைதிநன்று.

இடபம்: குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கும் விஷமிகள் புனைந்துரைகளினால் ஆத்திரம் அடைவீர்கள் ஏக்கத்தின் சாயல் நிழல் போலத் தொடரும் கணவன் மனைவி பிரிவுத் துயர் வேதனையைத் தரலாம்.

மிதுனம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும் இலட்சிய வாதிகள் பூரிப்படைவார்கள் குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும் பேச்சு வன்மையால் பெரும் புகழ் குவியும்.

கடகம்: சிறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாறவைக்கும் வேண்டியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம் தனிய நஷ்டத்திற்கும் இடமுண்டு அடக்கத்தையும் செலவையும் கட்டுப்படுத்தவும்.

சிங்கம்: இதயத்தில் ஏக்கம் தணியும் தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகார சிந்தை மேலிடும் நண்பர் ஒருவர் கைகொடுத்து உதவி செய்ய முன்வருவார் செல்வாக்குப் பெருகும்

கன்னி: புரட்சிகரமானமாறுதல்களை விரும்புவீர்கள் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும் உங்கள் முன்னேற்றத்திற்கு அரசியல் வாதிகளும் படையெடுப்பார்கள்.

துலாம்: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம் கடமையறுமிடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் சமயோசித புத்தியினால் எதையும் சமாளிக்கவும்.

விருச்சிகம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பப் பிரச்சினைகளில் நல்ல முடிவு உருவாகும் சுற்றுடலில் வேண்டியதைச் சாதிக்கும் நிலை உருவாகும்.

தனு: கொடுக்கல் வாங்கல் மூலம் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும் கடன் தொல்லை அதிகரிக்கும் நண்பர் ஒருவர் உங்களைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்வார்கள்.

மகரம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும்.

கும்பம்: இதமான வாழ்வு இன்றைய இவற்றுடன் பெரியவர்களின் ஆதரவும் ஏராளமாகக் கிடைக்கும் செய்தொழிலில் சிறப்புக் கிடைக்கும் பொன்னான தினம்.

மீனம்: உறவு முறைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படும் அபிப்பிராய பேதங்கள் மறைவதற்கு இடமுண்டு பயனுள்ள கடிதம் ஒன்று இன்று உங்களுக்குக் கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

---

## இன்று நடக்கும் பிரதிஷ்டை

(மானிப்பாய்)

சந்தரோடை வீரகத்திவிநாயகர் ஆலயத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட எழுந்தருளி மூர்த்திக்கு குடமுழுக்குவிழா நடத்தப்பட்டு பன்னிரண்டாம் நாளான இன்று 13ம் திகதி நூற்றியெட்டுச் சங்குகளினால் அபிஷேகம் நடாத்தப்படவுள்ளது விசேட ஆராதனைகள் நடைபெற்று மூர்த்தி வீதி உலாவரும் நிகழ்ச்சி நடைபெறும்.

மலேஷிய அன்பர்களின் தொண்டாக மேற்படி எழுந்தருளி உற்சவமூர்த்தி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பன்னிரண்டு தினங்களுக்கு விசேஷ மங்கள இசை, சமயப்பிரசங்கம் என்பன நடாத்தப்பட்டன.

---

## ரூப வாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-01 | 'சீஸாம் ஸ்ரீட்' சிறுவர் நிகழ்ச்சி [ஆங்கிலம்] |
| 7-00 | செய்தி மஞ்சரி [தமிழ்] |
| 7-15 | உலகசாதனை 'கின்னஸ்' புத்தகத்திலிருந்து |
| 7-45 | பொம்மலாட்டம் |
| 8-15 | செய்தி மஞ்சரி [சிங்களம்] |
| 8-30 | சிங்கள நிகழ்ச்சி |
| 9-30 | செய்தி மஞ்சரி [ஆங்கிலம்] |
| 9-45 | ஆங்கில திரைப்படம் |

---

இளைஞர்களின் செயல் குறித்து

## வவுனியா நகரசபை பலத்த கண்டனம்!

அமிர்தலிங்கத்துக்குப் பாராட்டு

[வவுனியா]

எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசிய யாழ்ப்பாணக்கூட்டத்தில் இளைஞர்கள் நடந்துகொண்ட செயல் குறித்தும், அவரது காரைக்கட்டியது குறித்தும் வவுனியா நகரசபை பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

வவுனியா நகரசபைகூட்டம் திரு. ஜ மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கே. சுந்தரலிங்கம், இக்கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். யாழ். மாநகரசபைத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் இளைஞர்கள் துப்பாக்கியால் சுட்டு கூட்டம் தொடர்ந்து நடக்காமல் குழப்பிய செயலையும், காரைக்கட்டியதையும் சுட்டிக்காட்டி, சபையில் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியது.

இளைஞர்களின் பயமுறுத்தலுக்குப்பிறகும், தலைநிமிர்ந்து கூட்டத்தில் தொடர்ந்து பேசிய திரு அமிர்தலிங்கம் இத்தீர்மானத்தில் பாராட்டப்பட்டுள்ளார்.

---

## 'வடக்கில் சனசமூகநிலையங்கள் வளர்ச்சிபெறவில்லை!'

(மானிப்பாய்)

"யாழ்ப்பாண மாவட்டத்தில் நானூற்றுக்கு மேற்பட்ட சனசமூக நிலையங்கள் இருந்தும் இவற்றின் சேவை போதியளவு வளர்ச்சியடைந்துவிடவில்லை இருந்தும் இன்று கிராமங்கள்தோறும் நூல்நிலையங்கள் இருப்பதற்கு சனசமூக நிலையங்களே காரணமென்பதை நாம் மறந்துவிட முடியாது''

இவ்வாறு ஆனைக்கோட்டை அம்மாள் சனசமூக நிலையத்தின் பன்னிரண்டாம் வருடப் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரைநிகழ்த்துகையில் யாழ். ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் தமிழ்ப் பாடசாலை அதிபர் திரு ந சிவபாதம் (புத்தொளி) எடுத்துக் கூறினார்.

இவ்வைபவத்தில் இச்சனசமூக நிலையத்துக்குப் பெரும் பணியாற்றிய அமரர் டாக்டர் அ. கெங்காதரனின் உருவப் படம் திறந்துவைக்கப்பட்டது.

திரு. க மனோகரன் உட்பட பலர் இவ்வைபவத்தில் உரைநிகழ்த்தினார்கள்.

---

## 4ம் தர அதிபர் பதவி கிடைக்கும்

[மானிப்பாய்]

80ம் வருடம் ஏப்ரல் 30ம் திகதியின்போது ஐந்தாம்தர அதிபர்களாயிருந்த அனைவரது விபரங்களையும் தமக்கு அறிவிக்குமாறு கல்வி அமைச்சு பிரதேச கல்விப்பணிப்பாளர்களுக்கு பணித்துள்ளது

இவர்களுக்கு 4ம் தர அதிபர் பதவிகள் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

---

## வீதி புனரமைப்பு

[கிளிநொச்சி]

பன்முக வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் முதலாம், 2ம் வீதிகள் புனரமைப்புச்செய்யப்பட்டுள்ளன இவ்விரண்டுவீதிகளையும் திருத்துவதற்கெனக் கிளிநொச்சி எம். பி திரு. வி. ஆனந்தசங்கரி 20 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியிருந்தார், இந்நிதியிலிருந்து யாழ் மாவட்ட கிளிநொச்சி உப அலுவலகத்தினர் இவ்வீதியைத் திருத்தியமைத்தனர்.

---

## சபை இடமாற்றம்

(கரவெட்டி)

தொண்டைமானாறு வீரகத்தி பிள்ளை மகா வித்தியாலயத்திலும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் ... தொழில்நுட்ப ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கே. குணசிங்கம், தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு இம்மாதம் முதல் முழுநேர தொழில் நுட்ப ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# "தமிழ் இளைஞரை அநியாயமாக அரசு சித்திரவதை செய்கிறது!"

## மட்டுநகரில் வட்டு. எம். பி. நீலன் கடும் தாக்கு

[மட்டக்களப்பு]

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்படுவதை எந்த ஒருமனிதாபிமானமுள்ள மனிதனும் ஆதரிக்கமாட்டான்.

ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை மேலும் மேலும் தீவிரப்படுத்தும் இந்த அரசுக்கு எமது எதிர்ப்பை தெரிவிக்க இத்தேர்தலை தமிழ் மக்கள் அனைவரும்பயன்படுத்த வேண்டும்"

இவ்வாறு மட்டக்களப்பு மாநகரசபை 10ம் வட்டாரத்தில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநகரசபைத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வட்டுக்கோட்டை எம். பி. டாக்டர் நீலன் திருச்செல்வம் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு தொகுதி அமைப்பாளர் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இப்பிரசாரக்கூட்டத்தில் வட்டு. எம். பி டாக்டர் நீலன் திருச்செல்வம் தொடர்ந்து பேசுகையில்கூறிய தாவது:-

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச ஜூரர் சபை ஆகியன கோரிக்கை விடுத்தன. இக் கொடிய சட்டத்தை கண்டித்து அறிக்கைவிட்டன. தென்னிலங்கையிலுள்ள இடதுசாரி இயக்கங்கள் இச்சட்டம் கொடூரமான ஒரு சட்டம் என வர்ணித்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிகூட எதிர்த்தது. ஆனால் ஐக்கியதேசியகட்சி அரசாங்கம் இச்சட்டத்தை மேலும்மேலும் தீவிரப்படுத்தி வருகிறது இன்று தென்னிலங்கையில் நடைபெறும் இடைத் தேர்தலில் இச்சட்டத்தை தாம் நீக்கமாட்டோம் தமக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் செய்கிறது. ஆகவே எமது மக்களின் விடுதலை உணர்வை அழித்து ஒழித்துவிட நினைக்கிறது இந்த அரசு, தந்தைவர்களை விரிவுரையாளர்களை, இளைஞர்களை அநியாயமாக சித்திரவதைக்குள்ளாக்கிசிறைகளில் அடைத்துவைத்திருக்கிறது. இந்த அரசு, தமிழ்மக்களுக்கெதிரான பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல் நடத்துகிறது இந்த அரசு ஒரு தமிழனும் இந்த அரசை ஆதரிக்கமாட்டான். ஆதரிக்கவும் முடியாது.

இந்த அரசின் அடக்குமுறைகளை தமிழ்மக்கள் பூரணமாக எதிர்க்கிறார்கள் என்பதை உலகறியச்செய்ய தமிழ்மக்கள் அனைவரும் இந்த அரசுக்கெதிராக வாக்களிக்கவேண்டும்.

தமிழ் மக்கள் இந்த அரசுக்கு வாக்களிப்பார்களானால் தமிழ் மக்களும் பயங்கரவாததடைச் சட்டத்தை ஆதரிக்கிறார்கள் என இந்த அரசு நிச்சயம் பிரசாரம் செய்யும். ஆகவேஎந்தக் கட்டத்திலும் தமிழ் மக்கள் இந்த அரசுக்கு ஆதரவளிக்கக் கூடாது. ஆதரவளிக்க மாட்டார்கள்.

அதேபோல மக்கள்தீர்ப்பின் போது அந்த மக்கள் தீர்ப்பை எதிர்த்தே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளமக்கள் வாக்களித்தார்கள் இந்தமட்டக்களப்பு மக்கள் தமக்கு ஒரு தேர்தல் வேண்டும் தாம் ஒரு பிரதிநிதியை தெரிவு செய்ய ஒரு சந்தர்ப்பம் வேண்டும், என்று மக்கள் தீர்ப்புக்கு எதிராக வாக்களித்தார்கள். ஆனால் அம்மக்களின் கோரிக்கையை நிராகரித்து தமிழ் மக்களின் இறைமையை மறுத்து இந்த மட்டக்களப்பு மக்கள் தாம் விரும்பிய பாராளுமன்ற பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்யும் உரிமையை மறுத்திருக்கும் இந்த அரசுக்கு எமதுபலத்தை தெரிவிக்க வேண்டும்.

ஜோசப்மேரி அடிகளார், முதன்மை வேட்பாளர் திரு இ. அம்பலவாணர், திரு. பொன் வேணுதாஸ், திரு இ சௌந்தரராஜன்மிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தலைவர் திரு பி ஜோசப் உட்பட பலரும் உரைநிகழ்த்தினர்.

# காங்கேசன் கொலை முயற்சி வழக்கு

## விசாரணைக்கு வராத சாட்சி கைதானர்!

(மாவிட்டபுரம்)

வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்கத் தவறிய சாட்சி ஒருவர் பகிரங்க பிடிவிறாந்தில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டபின் 5000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

காங்கேசன்துறை புகையிரத நிலைய விடுதிக்குள் வைத்து புகையிரதப்பகுதி ஊழியரான ரணசிங்க ஆராய்ச்சிகே ஜயந்த பெரேரா என்பவரை இரு புக் கம்பியால் தாக்கி கொலைசெய்ய முயன்றதாக புகையிரதப்பகுதி ஊழியரான பி. நெவில்வீரசிங்க என்பவர் மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே விசாரணைக்கெடுக்கப்பட்டு முக்கிய சாட்சியான வவனியாவைச் சேர்ந்த மெய்யழகன் யோகநாதன் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமையால் விசாரணை ஒத்திப் போடப்பட்டிருந்தது.

அத்துடன் மேற்படி சாட்சி மீதும் மல்லாகம் நீதிபதி பகிரங்க பிடிவிறாந்து பிறப்பித்திருந்தார்.

இதன்பேரில் மேற்படி நபர் வவனியாவில் வைத்து வவனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிபதி அவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இச் சமயம் மேற்படி தாக்குதல் வழக்கு மீண்டும் விசாரணைக்காக மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது. அச் சமயம் றிமாண்டிலிருந்த மேற்படி சாட்சி சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்.

இவரது சாட்சியம் முடிவடைந்ததும் இவரை றிமாண்டிலிருந்து விடுதலைசெய்யுமாறு அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. விஜயேந்திரா கூறினார்.

மேற்படி தாக்குதல் வழக்கில் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.ஜே செல்வரத்தினம் 'மேற்படி சாட்சி நீதிமன்றத்தில் சமூகமளிக்காமையால் கடந்த ஒரு வருடகாலமாக இந்த வழக்கின் விசாரணை ஸ்தம்பித்திருந்தது இதனால் அரச ஊழியரான எதிரியும் வேலையில்லாது இருக்கிறார், ஆகவே தொடர்ந்தும் இந்த சாட்சி தேவைப்பட்டால் பின்னரும் விசாரணை ஸ்தம்பிதநிலையை அடையும். ஆகவே இவரை பிணையில் விட்டு மாதமொருமுறை பொலிசில் ஆஜராகுமாறு உத்தரவிடுவதே நல்லது" என வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதி திரு சி. வி. விக்னேஸ்வரன் மேற்படி சாட்சியை 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மாதத்தில் வரும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வவனியா பொலிசில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

# டிராக்டர் பெட்டியிலிருந்து தவறி விழுந்து மரணம்

[மன்னார்]

டிராக்டர் பெட்டியில் இருந்து பயணம் செய்தவர் தவறிவிழுந்து மரணமானார். மன்னார் உயிலங்குளம் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சந்தான் ஜோறின் (வயது 30) என்பவரே மரணமானவராவர்.

இம்மரணம் தொடர்பாக மன்னார் பொலிசாரின் விசாரணையையடுத்து மரணவிசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.


நீங்கள்

திருசிராப்பள்ளி,
திருவனந்தபுரம்,
சென்னை, பம்பாய்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், டூபாய்,
அல்லது
கனடா
ஆகிய நாடுகளுக்கு
செல்ல

மற்றும்

✶ விமான டிக்கட்
✶ அமெரிக்கன்
டிரவல்லர்ஸ் செக்
(வங்கியின்
கட்டணத்தில்)
மற்றும்
உங்கள் பிரயாண
தேவைகளுக்கு
இன்றே தொடர்பு
கொள்ளுங்கள்

மக்கினேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

த. பெ. எண்: 92 போன்: 24154


# "நேர்மையுடன் வாழ்ந்த பொலிஸ் அதிகாரி"

[சுழிபுரம்]

"நேர்மையாக எதையும் மறைக்காது திறந்த மனத்துடன் வாழ்ந்துவந்தவர் அமரர் வ. ஆறுமுகம் பொலிஸ்சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டாக பணியாற்றிய உத்தமர் இவர் பக்கம் சாராமையுடன் இருந்து கடமையாற்றினர். குற்றம் செய்தவனைக் கண்டுபிடிப்பதில் திறமைமிக்கவராக இருந்தார். ஓய்வுபெற்றபின் காலத்தில் பொதுப்பணியிலும், தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும் இவர் பாடுபட்டார். சோதிடக்கலையிலும் ஈடுபட்டிருந்ததால், தமது மரணத்தை முன்கூட்டியே அறிந்திருந்தார்.

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் பண்ணாகம் அமரர் வ. ஆறுமுகம் இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரம்பமான காலம் முதல் இன்றுவரை எம்முடன் சேர்ந்த ஒரு தொண்டராக விளங்கி வந்த இவரது மறைவு எமக்குபெரும் நஷ்டமாகும் என்றார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் அதிபர் வை. இராசசுந்தரம், திரு. க. வாமதேவன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

# பாலஸ்தீன மாணவிகள் மூர்ச்சையற்றது ஒரு உளரீதியான பாதிப்பு!

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு

ஜெனிவா, மே. 12

ஜோர்தானின் மேற்குக் கரை பகுதியில் மர்மமான முறையில் பாலஸ்தீன மாணவிகள் பலர் மூர்ச்சையற்றுப் பாதிக்கப்பட்டது ஒரு ஊரீதியான கோளாறு என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த ஸ்தாபனத்தின் வருடாந்த கூட்டம் ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வருகிறது. இக் கூட்டத்தில் பாலஸ்தீன மாணவிகள் மூர்ச்சையற்றுப் பாதிக்கப்பட்டது குறித்தும் ஆராயப்பட்டது.

அந்த ஆய்வுகளின் இறுதியிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. பாலஸ்தீன மாணவிகள் மூர்ச்சையற்றுப் பாதிக்கப்பட்டது குறித்து ஆராயும்படி உலக சுகாதார ஸ்தாபனத்தைக் கேட்டிருந்தது

விஷமிகள் நச்சுத் திராவகத்தை அம்மாணவிகள் பாடசாலைகளில் நடமாடும் பகுதிகளில் தெளித்ததனால் அல்லது அவர்களது உணவில் நஞ்சு கலக்கப்பட்டதால் அவர்கள் அவ்வாறு மூர்ச்சையற்றுப் பாதிக்கப்பட்டிருக்கலாமென்று முன்னர் பலர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தனர். ஆனால் உலக சுகாதார ஸ்தாபன அறிக்கை இவ் அபிப்பிராயங்கள் அர்த்தமற்றவை என்பதைக் காட்டுகிறது. [ கி ]

# 'தமிழினத்தின் ஒற்றுமையை கட்டிக்காக்க வேண்டும்"

## பருத்தித்துறை முதல் வேட்பாளர் அறிக்கை

(புலோலி)

'தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைய விடாது கட்டிக்காக்க வேண்டியது தமிழினத்தின் தலையாய கடமையாகும் தமிழினத்தின் ஒரே இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியே. பருத்தித்துறை நகரசபையில் கடந்த நாலு ஆண்டு கால தமிழர் விடுதலைக் கூட்டணி நிர்வாகத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். எனவே மீண்டும் பருத்தித்துறை நகர அபிவிருத்தி மேம்பாட்டிற்காக இப்பகுதி மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே தமது வாக்குகளை அளிக்கவேண்டும்'

இவ்வாறு பருத்தி துறை நகரசபை தமிழர் விடுதலைக் கூட்டணி முதலாவது வேட்பாளரும் தற்போதைய நகரசபைத் தலைவருமான சட்டத்தரணி எஸ். வேலும்மயிலும் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். சட்டத்தரணி வேலுமயிலுவினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'பருத்தித்துறை நகரசபையில் கடந்த நாலு ஆண்டு கால தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகத்தில் பல அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகரை இயன்றளவு அழகு படுத்தியுள்ளோம். சந்தையைச் சுற்றிவர உள்ள வீதிகள் இரட்டை வீதிகளாக்கப்பட்டு நகரில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டன

'அமெரிக்க நிறுவனத்துடனான குடிநீர்த்திட்டம், 8 லட்சம் ரூபா செலவிலான புதிய இரட்டைமாடி நூலகம் அமைத்தல் போன்றன வற்றிற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன

பருத்தித்துறை மக்களின் நீண்டகால குறைபாடாகிய திறந்தவெளியரங்கொன்று இல்லாத குறைபாட்டை நீக்குமுகமாக பருத்தித்துறைக் கடற்கரையில் திறந்தவெளியரங்கொன்று நிறுவி அத்திறந்த வெளியரங்கிற்கும் பருத்தித்துறை நகரசபையில் 25 வருடங்களுக்கு மேலாக மக்களுக்குச் சேவை செய்த முன்னாள் நகரசபை பிதா அமரர் எஸ். நடராசாவின் பெயரைச் சூட்டுவதற்கான நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன' என்றார்.

# 5ம் வகுப்பு புலமைப்பரிசு பரீட்சை

(மானிப்பாய்)

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வரும் ஆகஸ்ட் 15ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இதற்கான அறிவித்தலை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

குருநகர் இராணுவ முகாமில் காவலிலுள்ள

# ஈஸ்வரநாதன், நாகராஜாவை சட்டத்தரணிசந்திக்கஅனுமதி

(கொழும்பு)

குருநகர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கதிரவேலுப்பிள்ளை ஈஸ்வரநாதன் அல்லது ஞானேஸ்வரநாதன் கிருஷ்ணபிள்ளை நாகராசா அல்லது இராசக்கிளி ஆகிய இருவரையும் குறிப்பிட்ட நான்கு சட்டத்தரணிகள் ஒருவர் வரும்போது சந்திக்க அனுமதி வழங்குமாறு அப்பீல் நீதிமன்றம் இராணுவ தளபதிக்கு உத்தரவிட்டது.

இவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதியரசர்கள் ஓ எஸ். எம். செனவிரத்ன, ஜஸ்டின் அபயவர்த்தன ஆகியோர் மேற்படி தீர்ப்பை வழங்கினர்.

மேற்படி இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர் மனு மீது ஆஜரான சட்டத்தரணி திரு எஸ். ருத்திரமூர்த்தி பின்வருமாறு கூறினார்.

குருநகர் இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஈஸ்வரநாதன் நாகராஜா ஆகிய இருவரையும் நீதிமன்ற அனுமதியுடன் சட்டத்தரணி திரு. சேவியர் சந்திக்கச் சென்ற போது அவர்கள் இருவரும் சட்டத்தரணியைச் சந்திப்பதற்கு அதிக விருப்பம் காட்டவில்லை. நாகராசா மிகவும் பயத்துடனும் பதட்டத்துடனும் காணப்பட்டார்.

இவர்கள் குருநகர் இராணுவ முகாமில் காவலில் இருந்த வேளையிலேயே நவரத்தினராஜா என்ற ஒரு கைதி முகாமில் மரணமானார் இச்சம்பவம் தொடர்பான தகவல்களை இந்த இரு இளைஞர்களும் சட்டத்தரணிகளிடம் வெளியிடலாம் என்பதற்காக சட்டத்தரணிகளைச் சந்திக்கக் கூடாது என அவர்களை இராணுவத்தினர் பயமுறுத்தியிருக்கலாம் என அஞ்சுகிறோம் எனவே அவர்களைச் சந்திக்க சட்டத்தரணிகளை எந்த நாளும் அனுமதிக்க வேண்டும்.

"காவலில் இருக்கும் இளைஞர்களை சட்டத்தரணிகள் வாரம் இருநாட்கள் மட்டுமே சந்திக்க அனுமதிக்கலாம் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைக்குப்பதில் அளித்த திரு. ருத்திரமூர்த்தி காவலில் வைக்கப்படுபவர்கள் சட்ட ஆலோசனை பெறுவதற்கு சட்டத்தரணிகளைச் சந்திப்பது அவர்களது அடிப்படை உரிமை எனவே இந்த இளைஞர்கள் சட்டத்தரணிகளைச் சந்திப்பதற்கு எதுவித கட்டுப்பாடும் விதிக்க முடியாது" என்றார்.

இதையடுத்து நீதியரசர் பின்வருமாறு தீர்ப்பு வழங்கினர்.

"சட்டத்தரணிகளான திருவாளர்கள் சந்திரகாசன் சேவியர், உருத்திரமூர்த்தி, விஜயராஜா ஆகியோரில் ஒருவர் மேற்படி இளைஞர்களை எந்த நாளும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிக்குட்பட்ட நேரத்தில் முகாமுக்குச்சென்று சந்திக்கலாம் அதற்கு முன்னறிவித்தல் தேவையில்லை இவர்களது சந்திப்புக்கு இராணுவத்தளபதி சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் அவர்களை தனிமையில் சந்திக்க அனுமதிக்க வேண்டும் இல்லையேல் உரிய அதிகாரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## இப்போது 150 பேர் மட்டும்

(மானிப்பாய்)

இலங்கை - நோர்வே கூட்டாக நடத்திவரும் காரைநகர் மீன்பிடி, மீன்பதனிடும், கப்பல் கட்டும் தொழிற்சாலையில் தற்போது 150 பேர் மட்டுமே தொழில் செய்கின்றார்கள்.

இங்கு சிறிது காலத்துக்கு முன்னர் சுமார் ஆயிரம் பேர் வரை தொழில் பார்த்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லஇன புல் நாற்றுகள்

(யாழ்ப்பாணம்)

நல்ல இனப் புல் நாற்றுகளை யாழ். மிருகவைத்தியஸ்தாபனத்தார் இனமாக வழங்குகிறார்கள். தேவையானோர் உடன் பெற்றுக் கொள்ளலாம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி இறந்துபோன யாழ்ப்பாணம் குருநகர் பால உடையார் வீதி 54ம் இலக்கம் அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை அல்லது செல்வநாயகம் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர்

அந்தோனிப்பிள்ளை மகள் எட்வீனம்மா இல. 54 பால உடையார் வீதி குருநகர் யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணச்சொத்து) இல. 3711

நியாயாதிக்கம்)

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை நயப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம் ஆண்டு வைகாசி மாதம் 25ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளை ஆக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்

1983ம் ஆண்டு மார்ச் மாதம் 31ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்

பதிவாளர்

தயாரித்தது

இ. மரியாம்பிள்ளை

மனுதாரின் சட்டத்தரணி

7212

## ரூ. 50 கோடி செலவில் தேசியவிளையாட்டு மைதானம்

(கொழும்பு)

50 கோடி ரூபா செலவில் தேசிய விளையாட்டுமைதானம் ஒன்று கொழும்பில் நிறுவப்படவிருக்கிறது.

ஹவ்லக் குதிரைப்பந்தய மைதானத்திலான 22 ஏக்கரில் இந்த விளையாட்டு மைதானம் அமையும். வெளியரங்கில் 50000 பேரும், உள்ளரங்கில் 8000 பேரும், ஒரே சமயத்தில் இருந்து பார்க்கக்கூடிய வசதிகள் இருக்கும். அத்துடன் நீச்சல் தடாகம், பயிற்சிக்கூடம், தங்குமிடம், நூலகம், நிர்வாகப்பிரிவுகளும் அமையும்.

30 கோடி ரூபாவை வர்த்தகர்கள் வழங்க முன்வந்துள்ளார்கள். மற்றும் 20 கோடி ரூபாவை, வர்த்தகர்களிடமிருந்து திரட்ட முடிவுசெய்யப்பட்டுள்ளது.

வர்த்தகஅமைச்சரும் விளையாட்டுத்துறை அமைச்சரும் கூட்டாக இத் திட்டத்தை அமைச்சரவையில் நேற்று சமர்ப்பித்தனர். இத் திட்டம், பொருளாதார உபகுழுவுக்கு அமைச்சரவை சமர்ப்பித்துள்ளது. (இ)

## நீதியமைச்சு சிபார்சு

(கொழும்பு)

மேல்நீதிமன்றங்களில் விசாரணைக்காக வழக்குகள் தேங்கிகிடப்பதால், சிரேஷ்ட சட்டத்தரணிகளை, நீதிபதிகளாக நியமிக்குமாறு நீதி அமைச்சர் அமைச்சரவைக்கு சிபார்சு செய்துள்ளார். (இ)

## ஜனாதிபதியின் பிரிட்டன் விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

எலிசபெத் மகாராணியின் அழைப்பையேற்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாபிரிட்டனுக்கு மேற்கொள்ள விருந்த விஜயம் பிரிட்டிஷ் பொதுத் தேர்தலை ஒட்டி ஒத்தி போடப்பட்டுள்ளது. (க)


ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-30
லவகுசா

ஹரன் (யாழ் நகர்)
தினசரி 5 காட்சிகள்
Blood Line
(color)

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
13-5-83 வரை
தில்லு முல்லு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
14-5-83 வரை
கமலஹாசன் ராஜபார்வை
15—19-5-83 உல்லாசப் பறவைகள்
வெகு விரைவில் சகலகலா வல்லவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சரத் பாபு, சுஹாசினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)
14-5-83 முதல் James Bond in MOON RAKER

றீகல் 4-வது ஹவுஸ் புல் வாரம்
(யாழ்.நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, பிரபு, சுந்தரராஜன், ஸ்ரீப்பிரியா
சங்கிலி
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ். நகர்) தினசரி இன்னும் சில தினங்கள் மட்டும் 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
அடுத்த வெளியீடு IDEAL MARRIAGE

மனோகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ். நகர் -
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் வெள்ளிவிழாக் கொண்டாடிய வெற்றிப்படைப்பு
சிறந்த கதை - சிறந்த நடிப்பு - சிறந்த பாடல்கள் நிறைந்த உன்னத சித்திரம்
✶ பாலாஜியின்
✶ சிவாஜி ✶ நாகேஷ்
✶ லட்சுமி ✶ மனோரமா
✶ வி.கே.ராமசாமி ✶ வாசு
✶ தேங்காய்
தியாகம்
நடிக்க ✶ இளையராஜா ✶ விஜயன் ஈமன் கலர்

SPOKEN ENGLISH COURSE
● துரித 5 மாத காலப் பயிற்சி
● மிகக் குறைந்த கட்டணம்
● இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
யாழ். பிரபல ஆசிரியர்
K. S. N. CUMARAN
ஆரம்பம்: 14-5-83 மாலை 3.00
விபரங்களுக்கு:
Darmananda Institutes
250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
தொலைபேசி: 24011

# நவரத்தினராஜாவை எப்போது யார் கைதுசெய்தது என்பது தெரியாது

## மரணவிசாரணையில் மேஜர் குலதுங்கா சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"பரந்தனில் இராணுவ வாகனங்களை மறித்துத் தாக்கியது தொடர்பாகச் சந்தேகநபர் நவரத்தின ராசா கைது செய்யப்பட்டார் இச்சந்தேகநபர் எப்பொழுது. யாரால் கைது செய்யப்பட்டார் என்பது பற்றியோ, குருநகர் முகாமுக்குக் கொண்டுவரப்படுவதற்கு முன் சந்தேகநபர் வேறு எந்த இராணுவ முகாமிலாவது வைக்கப்பட்டாரா என்பது பற்றியோ எனக்குத் தெரியாது. சந்தேகநபர் 9-4-83 பிற்பகல் 9-30 மணியளவில் உணவு ஒன்றும் அருந்தவில்லையென்று கூறப்பட்டது நான் டாக்டர் ஏபிரகாமுடன் தொடர்பு கொண்டேன். தாம் நோயாளியை இருதடவை பார்வையிட்டதாகவும், கடுமையான நோயெதுவும் தாம் காணவில்லையென்றும், மேலதிக ஆலோசனைக்கு வைத்திய நிபுணரை நாடும் படியும் டாக்டர் ஏபிரகாம் தெரிவித்தார். மறுநாள் காலை சந்தேகநபர் இறந்துவிட்டார்."

இவ்வாறு குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் எஸ். குலதுங்க, இராணுவமுகாமில் மரணமான களிவெட்டியைச் சேர்ந்த நவரத்தினராசா மரணவிசாரணையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

"நான் குருநகர் இராணுவ முகாமில் ஒரு மேலதிகாரியாகக் கடமையாற்றுகின்றேன். எனது கடமை, முகாமிலுள்ள வேலைகள் எல்லாவற்றையும் மேற்பார்வையிடுவது 5-4-83 பிற்பகல் 1-10 மணியளவில் எனக்கு வைத்திய ஓடலி ஆரியரத்தன என்பவரிடமிருந்து, நவரத்தினராசா உணவு சாப்பிடவில்லையென அறிவிப்பு வந்தது அவர் வாந்தி எடுப்பதாகவும் சொன்னார், நான் முகாமுக்கு அண்மையிலுள்ள டாக்டர் ஏபிரகாமுக்கு அறிவித்தேன். அவர் பிற்பகல் 1-15 மணியளவில் முகாமுக்கு வந்தார். அவர் நோயாளியைப் பரிசோதனைசெய்து மருந்துகள் சிபார்சு செய்தார். சிபார்சு செய்தபடி மருந்துகள் நோயாளிக்கு வழங்கப்படுவதை நான் செயல்படுத்தினேன் 8-4-83 எனக்கு ஞாபகம் இருக்கிறது! அன்றைய தினம் அவர் வாந்தி எடுப்பதாக ஓடலி சொன்னார்,

### மீண்டும் டாக்டர் வந்தார்

பி. ப 4-15க்கு நான் டாக்டர் ஏபிரகாமுக்கு அறிவித்தேன் சில நிமிடங்களின்பின் டாக்டர் வந்தார் நோயாளியைப் பரிசோதித்தபோது நானும் சமுகமாயிருந்தேன். இரு சந்தர்ப்பங்களிலும் நோயாளி டாக்டரிடம் தமிழில் சம்பாஷித்தார். நான் அறிந்தவரையில் நோயாளி வாந்தி எடுக்கும் நிலையில் இருந்தார். அதைவிட வேறு எதுவும் பற்றிக்கூறியதாக எனக்குத் தெரியவில்லை. பலாத்காரம் உபயோகித்ததாகக் கூறியதாக எனக்குத் தெரியாது. டாக்டர் நோயாளியைப் பரிசோதிக்கும் போது என்னைத் தவிர வைத்திய ஓடலியும் சமுகமாயிருந்தார். நோயாளிகளை டாக்டர் பரிசோதிப்பதற்காக ஒதுக்கப்பட்ட காம்பறையில் வைத்து அவரைப் பரிசோதித்தார் டாக்டர் குறிப்பிட்டபடியே நோயாளிக்கு மருந்து கொடுக்கப்பட்டது.

### இறந்துகிடப்பதாக அறிவிக்கப்பட்டது

10-4-83 காலை 6-15 மணியளவில் நோயாளி வைக்கப்பட்டிருந்த காம்பறையில் இறந்து கிடப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்பு நான் வடபிராந்திய பாதுகாப்புப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்து அதன் பின் பொலிசாருக்கும் அறிவித்தேன்.

### மேலதிக நீதவான் வந்தார்

"அன்றையதினம் காலை 9-30 மணியளவில் மேலதிக நீதவான் திரு வரதராசா முகாமுக்கு வந்து இறந்தவரின் சடலம் கிடப்பதைப் பார்வையிட்டு, குறிப்புகள் எடுத்தார் அத்தருணம் சார்ஜன்ட் பெரேராவினதும் லான்ட் கோப்பரல் குணவர்த்தனவினதும் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன மேலதிக நீதவானின் பணிப்பின்பேரில் இறந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது

### நேர்முகப்பரீட்சை

சந்தேகநபர் 27-3-83ல் தான் குருநகர் இராணுவ முகாமுக்குக் கொண்டு வரப்பட்டார்

ஒரு சந்தேகநபர் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டால் அவரை இராணுவப் பொலிசார் நேர்முகப் பரீட்சைக்குட்படுத்திய பின்னர் தான் ஏற்றுக்கொள்வர். இந்தச் சந்தேக நபரை முகாமுக்குக் கொண்டுவந்த பொழுது யார் நேர்முகப் பரீட்சையில் ஈடுபடுத்தியது என்று எனக்குத் தெரியாது வழமையாக இந்த நேர்முகப் பரீட்சை, முகாமில் பொறுப்பாக உள்ள இராணுவப் பொலிஸ் பொறுப்பதிகாரியால் நடாத்தப்படுகிறது. அவர் இல்லாத தருணத்தில் அவருக்கு அடுத்ததாக உள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் நேர்முகப்பரீட்சை நடத்துவார்.

'சந்தேக நபரை முகாமில் ஏற்கும்பொழுது பதிவேட்டில் தேவைப்பட்ட குறிப்புகளைப் பதிந்தபின்னர்தான் ஏற்றுக்கொள்ளப்படுவார். அந்தப் பதிவேடு 'லொக்புக்' என்று அழைக்கப்படும் ஒரு சந்தேக நபரை முகாமில் அனுமதித்த பின் சந்தேக நபருக்குப் பொறுப்பான இராணுவப் பொலிஸ் பொறுப்பதிகாரி அவரைக் கிரமமாகச் சந்தித்து ஏதாவது முறைப்பாடு செய்ய இருக்கிறதா என்பதைக் கேட்டறிவார். அப்படி முறைப்பாடு இருந்தால் அவை 'லொக்புக்'கில் பதியப்படும். மேலதிகாரிகள் இந்தப் பதிவேட்டுப் புத்தகத்தைப் பார்ப்பதுண்டு.

### பதிவேட்டில்.

'9-4-83 காலை நவரத்தினராசா உணவருந்தவில்லை என்று லொக் புத்தகத்தில் பதியப்பட்டிருப்பதை அவதானித்தேன்.

'5-4-83, 8-4-83, 9-4-83 ஆகிய தினங்களில் பதியப்பட்ட முறைப்பாடுகளைத் தவிர வேறு ஒரு முறைப்பாடும் பதியப்படவில்லை

### டாக்டர் ஏபிரகாம் ஆலோசனை

'83 பிற்பகல் 9-30 மணியளவில் நவரத்தினராசா உணவு ஒன்றும் அருந்தவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

உடனே நான் டாக்டர் ஏபிரகாமுடன் தொடர்புகொண்டேன். டாக்டர் ஏபிரகாம், நோயாளியை இருமுறை தாம் பார்வையிட்டதாகவும், நோயாளியிடம் கடுமையான நோய் எதுவும் காணவில்லை என்றும் மேலதிக ஆலோசனை வேண்டுமாயின் ஒரு வைத்திய நிபுணருடன் ஆலோசிக்கும்படியும், நீராகாரம் கொடுக்கும்படியும் சொன்னார் இது இரவில் நடந்தபடியால் எங்களால் வைத்திய நிபுணரை ஆலோசிக்கமுடியாத நிலையில், மறுநாள் ஆலோசிக்கலாமென்றிருந்தோம். ஆனால் மறுநாள் காலை 6 மணியளவில் அந்த நபர் இறந்துவிட்டார்.

'சந்தேகநபர்கள் இராணுவ முகாமுக்குக் கொண்டுவரப்பட்டால் அவர்கள் இராணுவப் பொலிசாரின் பொறுப்பில் முகாமில் வைக்கப்படுவர். நான்தான் இராணுவமுகாமில் நிர்வாக மேற்பார்வைக்குப் பொறுப்பாக உள்ளேன். ஆகவே சந்தேக நபர்களைப் பற்றிய விஷயங்கள் எல்லாம் இராணுவப் பொலிசாரினால் எனக்கு அறிவிக்கப்படும்

### முகாமுக்கு வருமுன் வைத்திய பரிசோதனை வழக்கமில்லை

ஒரு சந்தேகநபரை முகாமுக்குக் கொண்டுவரும்பொழுது அவரை ஒரு வைத்தியர் சோதிப்பது வழக்கமில்லை. ஆனால் ஒரு சந்தேகநபரைக் கொண்டுவரும்பொழுது அவரைப்பொறுப்பேற்பவர் விசாரித்து அவரது உடல் நிலையை அவதானித்து அவருக்கு ஏதாவது காயங்கள் இருக்கிறதா என்பதையும் அவர் ஏதாவது முறைப்பாடுசெய்ய இருக்கிறாரா என்பதையும் கேட்டு அறிந்து பதிவுசெய்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் கண்ணுக்குத் தெரியக்கூடிய காயங்கள் எதுவும் இருந்தால் அதையும் குறிப்பில் எழுத வேண்டும்.

### காயம் இருந்ததாக பதியப்படவில்லை

'இந்த சந்தேகநபரைப் பொறுப்பேற்றவரால் அவரின் உடலில் காயமிருந்ததாக ஒரு இடத்திலும் பதியப்படவில்லை அவர் ஏதாவது முறைப்பாடுசெய்ததாகவும் பதிவுசெய்யப்படவில்லை

'குருநகர் முகாமில் இராணுவத்தினரின் பிரிவு எனது மேற்பார்வையில் உள்ளது எனக்கு மேலாகவும் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளனர்.

### எப்பொழுது, யார் கைதுசெய்தார் என்பது தெரியாது

'இந்தச் சந்தேகநபர் எப்பொழுது கைதுசெய்யப்பட்டார் என்று என்னால் சொல்ல முடியாது. திருகோணமலை மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டதாக நான் அறிந்தேன். சந்தேக நபரைக் குருநகர் முகாமுக்குக்கொண்டுவருவதற்கு முன் அவர் வேறெந்த இராணுவமுகாமிலாவது வைக்கப்பட்டாரா என்பது எனக்குத் தெரியாது. சந்தேகநபர் இராணுவத்தினரால்தான் கைது செய்யப்பட்டாரா என்றும் என்னால் சொல்லமுடியாது.

"பரந்தனில் இராணுவ வாகனங்களை மறித்துத் தாக்கியதன்பேரில், சந்தேக நபர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அத்தாக்குதலின் போது பல குண்டு வெடிப்புகள் ஏற்பட்டன. நான் அந்த ஸ்தலத்தைப் பார்வையிட்டுள்ளேன். எனது அனுபவத்திலிருந்து கணிக்கக்கூடியது யாதெனில் குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட கிடங்குகளிலிருந்து அக்குண்டு வெடிப்புகள் மிகச் சக்தி வாய்ந்த குண்டுகளால் ஏற்பட்டவை இக்குண்டு வெடிப்புச் சம்பந்தமாகத்தான் இறந்தவர் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்" என்று கூறினார். [மா-அ]

---

### சகல இடங்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கடிதங்கள் எந்தவித பயனுமற்றவை தேர்தல் நடைபெற்றே தீரும் என்பதே சட்டம். வாக்குச்சீட்டில் நியமனப்பத்திரம் கையளித்த எல்லாக் கட்சிகளின் பெயரும் சின்னமும் இருக்கும். அப்படியாயின் திருகோணமலை நகரசபை போன்ற இடத்தில் என்ன நடைபெறும் என்பதை எமது மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அங்கே தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ஐக்கியதேசியக்கட்சி. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆகியன நியமனப்பத்திரங்களைக் கையளித்துள்ளன இந்த 4 கட்சிகளின் பெயரும் வாக்குச் சீட்டில் இருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பட்டியலில் ஒருவர் தவிர எல்லோரும் சிங்கள வேட்பாளர்கள், தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்காதுவிட்டாலும், சிங்கள வாக்காளர் வாக்களிக்கவே செய்வர். அப்படியாயின் அவர்களின் கைக்கு திருகோணமலை நகரத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்று அறிவுடன் எவரும் கூற முடியுமா?

"மட்டக்களப்பிலும் ஒரு தனிச்சிங்கள வேட்பாளர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது மட்டக்களப்பு மாநகர நிர்வாகத்தை அங்குள்ள 1000 சிங்கள வாக்காளரிடம் ஒப்படைத்துவிட்டுத் தமிழ்பேசும் வாக்காளர் ஒதுங்கிக்கொள்ளவேண்டுமா? வவுனியாவின் நிலைமை என்ன?

"திரு. குமார் பொன்னம்பலம் ஒரு தனிமனிதனாக முடிவெடுத்து அறிவிக்கலாம். பொறுப்புவாய்ந்த கட்சியான த. வி. கூட்டணி, தமிழீழம் முழுவதுமுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டே முடிவு செய்யலாம். யாழ்ப்பாணத்தில் ஒரு முடிவு, கிழக்கு மாகாணத்தில் ஒரு முடிவு, வவுனியாவில் ஒரு முடிவு என்று எமது கட்சி தீர்மானிக்க முடியாது. தனிப்பட்ட வேட்பாளர்கள் எடுக்கும் முடிவு தேர்தலை எவ்வகையிலும் பாதிக்காது. இந்த நிலையை மனதில் கொண்டு எமது வாக்காளர் புத்திசாலிகளாக வாக்களிக்கவேண்டும் என வேண்டுகின்றோம்.'

---

### நால்வரும் பிணையில் செல்ல அனுமதி

[வவுனியா]

காந்திய இயக்க அமைப்புச் செயலாளர் டாக்டர் ராஜசுந்தரம் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து ஹர்த்தால் நடத்துமாறு கோரி கடந்த மாதம் 7-ம் திகதி வவுனியாவில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தபோது கைதுசெய்யப்பட்ட நால்வரும் நேற்று வவுனியா மாவட்ட நீதபதியினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

---

### ஐ. தே. கட்சியுடன் தொடர்பில்லை

[யாழ்ப்பாணம்]

ஐக்கிய தேசியக்கட்சியின் நல்லூர்த் தொகுதி முன்னாள் அமைப்பாளர் திரு. பொ. கனகசபாபதி, தமக்கும் ஐ தே. கட்சிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்று தெரிவித்து அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார் திரு கனகசபாபதி கடந்த மாநகராட்சி மன்றத்தேர்தலின்பின் ஐ. தே. க. அமைப்பாளர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

---

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் பருத்தித்துறைவீதி ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோவில் கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது பகல் அன்னதானமும், இரவு நடிகமணி வி. வி. வைரமுத்து கோஷ்டியினரின் ஸ்ரீவள்ளி நாடகம் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

---

### பிந்திய செய்தி...

1-ம் பக்கத்தொடர்ச்சி)

தாகவும், பலர் தாக்கப்பட்டு காயமடைந்ததாகவும், ஸ்ரீதரன் என்னும் மாணவன் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்புக் கருதியே தாங்கள் யாழ்ப்பாணம் திரும்பியதாகவும் தெரிவித்தனர்.

---

### ஏபிரகாம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பின் கீழ் செயற்பட வேண்டுமென்ற காரணத்தால் தமிழ்க்காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, தமிழர்களின் அங்கீகாரத்தைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்து கொண்டேன்.

தற்போது இப்போட்டியிலிருந்து நான் விலகுகின்ற போதிலும், த. வி. கூட்டணிக்கு விசுவாசமாக என்றும் உழைப்பேன் என்று கூறிக் கொள்வதுடன் எனக்கு வேட்பாளனாக வாய்ப்பளித்த எனது கட்சிக்கும், எனக்கு ஆதரவளித்த வாக்காளர்களுக்கும், குறிப்பாக குருநகர் மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

கூட்டணி முதல் வேட்பாளர் சட்டத்தரணி சி நாகராசா உட்பட இதுவரை மொத்தம் ஆறு கூட்டணி வேட்பாளர்கள் தேர்தலிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர். (அ)

---

### 16ம் திகதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கருத்தையும் அறிந்து. அத்துடன் என்னுடன் பட்டியலிலிருக்கும் ஏனைய வேட்பாளர்களின் கருத்தையும் அறிந்து முடிவுக்கு வருவோம்.

"நாம் எடுக்கும் எந்தமுடிவையும் இம்மாதம் 16-ம் திகதி சாவகச்சேரியில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் அறிவிப்போம்." (வெ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber B. 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.